செ.வெ.எண்: 47 நாள்: 20.11.2016

**சிறு, குறு விவசாயிகளின் கூட்டுறவுக்கடன்களை தள்ளுபடி செய்து ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் - 63வது கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பெருமிதம்.**

புதுக்கோட்டை நகராட்சி, மச்சுவாடி ஏ.ஆர்.பி திருமண மண்டபத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் 63வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி அவர்கள் தலைமையில் இன்று (20.11.2016) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த சங்கங்களுக்கு கேடயங்களையும், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 63வது கூட்டுறவு வார விழா ஒரு வாரம் நடைபெற்று நிறைவு நாள் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. கூட்டுறவுத்துறையின் மூலம் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு பயிர்க்கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், சுயஉதவிக்குழு கடன்கள், மத்தியக்கால முதலீட்டுக்கடன்கள், கூட்டு பொறுப்புக்குழுக்கடன், தானிய ஈட்டுக்கடன் உள்ளிட்ட பல்வேறு வகையான கடன்கள் குறைந்த வட்டியில் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு 2016-17ம் ஆண்டு கூட்டுறவுக்கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க நமது மாவட்டத்திற்கு ரூ.124 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 8283 நபர்களுக்கு ரூ.33 கோடி மதிப்பீட்டில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து தரப்பினரும் கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 63வது கூட்டுறவு வார விழா ஒரு வாரம் நடைபெற்று நிறைவு நாள் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. மேலும் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களும், 12 நபர்களுக்கு ரூ.30.45 இலட்சம் மதிப்பீட்டில் கடன் உதவித்தொகைக்கான காசோலைகளும், போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளும், 2016ம் ஆண்டு 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் (487/500) பெற்ற மாணவி திவ்யதர்ஷினிக்கு பரிசுளும் வழங்கப்பட்டன. கூட்டுறவுத்துறையின் மூலம் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான கடன்கள் வழங்கப்பட்டு வருவதுடன் கூட்டுறவு மருந்துக்கடைகள், பயிர்க்காப்பீடு, பொதுவிநியோகத்திட்டம், வேளாண் சேவை மையம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

..2..

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராக பதவியேற்றவுடன் விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில் சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்ற வேளாண் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து முதல் கையெழுத்திட்டார். இதன் மூலம் நமது மாவட்டத்தில் இயங்கி வரும் 136 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் ஒரு கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலுள்ள 35382 சிறு, குறு விவசாயிகளுக்கு 31.03.2016 அன்று நிலுவையிலுள்ள கடன் தொகை ரூ.979432868ம், வட்டித்தொகை ரூ.74832298ம், அபராத வட்டி ரூ.7280335ம், இதரச்செலவினம் ரூ.1126353ம் என ஆக மொத்தம் ரூ.1062671854 மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறு, குறு விவசாயிகளின் கூட்டுறவுக்கடன்களை தள்ளுபடி செய்து ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பா.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.எஸ்.செல்லத்துரை, மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ந.மிருணாளினி, இணைப்பதிவாளர் திருமதி.எஸ்.பால்வடிவு, முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, அர்பன் கூட்டுறவு பண்டகசாலைத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட் என்ற அப்துல்ரஹ்மான், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு.பாஸ்கர், கூட்டுறவு சங்க தலைவர்கள், இயக்குநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**